1968 பிப்ரவரி 19]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சுப்பிரமணி பாரதியார் அவர்கள் எழுதிய கையெழுத்துப் பிரதிகள் இங்கே வைக்கப் பட்டிருக்கின்றன.

The Museum does not have manuscript of any other freedom fighter. என்று இருக்கிறது

ஆகவே, வ.உ.சி. கையெழுத்துப் பிரதிகள் இருப்பதாகத் தெரிய வில்லை. எங்கேயாவது இருப்பதாகத் தெரிந்து கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதை அரும் பொருள் காட்சியில் வைக்கலாம்.

ஹாஜி. ம. மு. பீர்முஹம்மது : தலைவர் அவர்களே, பழம் பெரும் புலவர்கள் இயற்றிய பல இலக்கியங்கள் ஏட்டுப் பிரதிகளாக பல குடும்பங்களில் இருக்கின்றன என்கிற உண்மை தெரிகிறது. அது போன்ற கையெழுத்துப் பிரதிகளை சேகரித்து, அவற்றைக் காட்சி சாலையில் வைக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பழங்காலத்தில் திரு. உ. வே. சுவாமிநாத அய்யர் அவர்கள் ஓலைகளையும், பல்வேறு சுவடிகளையும் சேகரித்திருக்கிறார்கள், சரஸ்வதி மஹாலிலும் காப்பாற்றப்பட்டு வருகின்றன. சென்னையிலும் பழங்கால ஏடுகள் பல்கலைக் கழகத்தால் காப்பாற்றப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட படிவுகள், அரும் பெரும் சுவடிகள் இருந்து, யாராவது தருவதற்கு முன்வந்தால், அதைக் காப்பாற்ற மாநில அரசு முயற்சி செய்யும்.

நிலப்பரப்பு அளவு முறையில் மாற்றம்

* 75 வின.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு, வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) நமது ராஜ்யத்தில் பூமியின் விஸ்திரணம் ஏக்கர் லிங்க்ஸ் என்கிற கணக்கிலிருப்பதை மெட்ரிக் சிஸ்டத்தின் அடிப் படையில் மாற்றியமைக்குமாறு மத்திய சர்க்கார் மாநில அரசாங்கத்தைக் கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) & (இ) ஆம். இது அரசாங்கத்தின் ஆய்விலுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: இதுவரையில் மெட்ரிக் சிஸ்டம் அடிப்படையில் மாற்றியமைக்க முடியாத நிலைமை இருக்கும் போது, அதிலே ஈடுபட்டிருக்கிற சர்வேயர்கள் போன வாரத்தில் கூட 100 பேர்களை வேலையிலிருந்து நீக்கப் பட்டிருக் கிறார்கள். இந்த வேலையைப் பூர்த்தி செய்யும் உத்தேசம் உண்டா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1968 பிப்ரவரி 19

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வேலையிலிருந்து நீக்கப் பட்டதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. நம்முடைய அளவு முறைகளை பொது மக்கள் ஏக்கர், லிங்க்ஸ் முதலிய அளவைகளில் இருக்கின்றன என்று புரிந்து கொண்டு இருக்கிறார்கள். அதை யெல்லாம் மெட்ரிக் முறைக்கு மாற்ற வேண்டும் என்று இந்திய அரசாங்கம் சட்டம் செய்திருக்கிறார்கள். தலைமுறை, தலைமுறை யாக இது இருந்து வந்திருக்கிற காரணத்தால், அவர்கள் குறிப் பிடும் வகையால் மாற்ற 10 வருஷ காலம் பிடிக்கும். ஆகவே, அந்த மாற்றம் செய்யும் வேலையை தள்ளி வைக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தை நம் அரசாங்கம் கேட்டிருக்கிறது.

திரு. வ. ஜார்ஜ் : அவைத்தலைவர் அவர்களே, மெட்ரிக் நில அளவை முறை இப்போது மறுநில அளவு செய்யப்படுகின்ற இடங்களில் கூட அமுல் படுத்தப்படவில்லை, இப்பொழுதும் கன்னியாகுமரியில் நடைபெறுகிற ரி-சர்வேயில் இம்முறை பயன் படுத்தப் படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மெட்ரிக் முறையை அமுல் படுத்த வேண்டும் என்று இந்திய அரசு சட்டமும் நிறை வேற்றி அதை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று சொல்கிறது. நடைமுறையில் இருக்கும் சங்கடங்களைக் கவனத்தில் கொண்டு நம் அரசாங்கம் அந்த வேலை முடிவடைய 10 ஆண்டு காலமாவது ஆகும், ஆகவே அதைத் தள்ளிப் போட வேண்டும் என்று கேட்டிருக்கிறது என்று தெரிவித்தேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இது ரெவின்யூ இலாகா சம்பந்தப்பட்ட கேள்வி. இந்த இலாகாவிலே பட்டாக்கள் ஜாயிண்ட் பட்டாக்களாக இருக்கின்றன. லோன்கள் வாங்க முடியாத நிலைமை இருக்கிறது. கிணற்றுக்கும் பம்பு செட்டுகள் வாங்கவும் முடியவில்லை. ஆகவே ,உடனடியாக, அரசாங்கம் ஜாயிண்ட் பட்டாக்களை தனிப்பட்டாக்களாக ஆக்கிக் கொடுக்க வேண்டும் என்பதை ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இது மூலக் கேள்வி யிலிருந்து எழாவிட்டாலும், கனம் உறுப்பினர் அவர்களுடைய சிரமங்கள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. என்ன செய்ய வேண்டும் என்பதற்கான ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. கே. விநாயகம் : சார், இப்பொழுது இருக்கிற பிரிட்டிஷ் சிஸ்டத்தைை மாற்றி அமைக்க சில ஆண்டுகள் பிடிக்கும் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், அந்த பிரிட்டிஷ் சிஸ்டத்திலேயே, இவ்வளவு ஏக்கர் என்றால் பொதுமக்களுக்குத் தெரியும். ஆனால் அதையே இவ்வளவு லிங்க்ஸ் என்கிறார்கள். " So many links in length and breadth " என்று எழுது கிறார்கள். அப்படி எழுதுகிறவர்களுக்கே அது தெரியுமா, அந்த சர்வேயர்களுக்கே தெரியுமா என்று தெரியவில்லை. ஆகவே,

1968 பிப்ரவரி 19]

குறைந்தபட்சம் இவ்வளவு 'ஃபீட்', 'இஞ்சஸ்', 'யார்ட்ஸ்' என்று மாற்றியமைக்கவாவது ஏதாவது உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது இருக்கிற சங்கடமான நிலைமை அடிப்படையில் 'ஹெக்டர்' என்று விஸ்தீர்ணத்தை குறிக்க வேண்டும் என்று மத்திய சர்க்கார் சட்டம் செய்திருக்கிறது. அதற்காகத்தான் காலம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு மாநிலத்தில் இருக்கும் முறையை மெட்ரிக் முறைக்குக் கொண்டுவருவதில் நடைமுறையில் கஷ்டங்கள் இருக்கின்றன.

கோட்டை வேங்கைப்பட்டிக்கு அருகிலுள்ள காட்டுப் புறம்போக்கு

*76 வினா—**திரு. என். [redacted]சங்கரய்யா :** மாண்புமிகு உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், தென்சிங்கம்புனரி கிராமத்தில் கோட்டை வேங்கைப்பட்டிக்கு அருகில் சர்வே நெ. 662 காடு புறம்போக்கு 213 ஏக்கர் நிலத்தை சாகுபடிக்குக் கொடுக்கும்படி நிலமற்ற விவசாயிகளிடமிருந்து அண்மையில் விண்ணப்பம் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (a) & (b) The petition referred to by the Member was forwarded to the District Revenue Officer, Ramanathapuram, for necessary action (in Government Memorandum No. 105624 F2/67-1, Revenue(dated 16th November 1967).

திரு. என். சங்கரய்யா : ஐயா, இப்பொழுது மனுச் செய்து கொண்டவர்கள் நிலமற்ற ஏழை விவசாயிகள். காட்டுப் புறம்போக்கு நிலங்களை அவர்கள் சாகுபடி செய்ய உரிமை கொடுக்க அரசாங்கம் மாவட்ட அதிகாரிகளுக்கு தாக்கீது அனுப்புவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிச் செய்ய வேண்டும் என்றுதான் வருவாய்த் துறையினர் இராமநாதபுரம் அதிகாரிக்கு 16-11-1967 அன்று அரசாங்கத் தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் மீது நடவடிக்கைகள் எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் மூல வினாவை ஒட்டி, 'தென்சிங்கம்புனரி கிராமத்தில் கோட்டை வேங்கைப்பட்டிக்கு அருகில் சர்வே நெ. 662 காடுபுறம்போக்கு . . . நிலத்தைச் சாகுபடிக்குக் கொடுக்கும்' தகவல் பற்றி ஒரு துணை வினாவைக் கேட்பார்கள்.